பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 08 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- நாட்டின் 78-ஆவது சுதந்திர தினம் இன்று நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது.
- பிரதமர் திரு நரேந்திர மோடி வரலாற்று சிறப்புமிக்க தில்லி செங்கோட்டையில் இன்னும் சற்று நேரத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகிறார்.
- தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளார்.
- தமிழகத்தின் இரண்டு இடங்கள் உட்பட நாட்டில் மேலும் மூன்று சதுப்பு நிலப்பகுதிகள் ராம்சார் தளங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.
- மாநிலத்தில் 14 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாட்டின் 78-ஆவது சுதந்திர தினம் இன்று நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது.

புதுதில்லியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க செங்கோட்டையில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்னும் சற்று நேரத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து 11-வது முறையாக திரு நரேந்திரமோடி தில்லி செங்கோட்டையில் தேசிய கொடியை ஏற்றுகிறார்.

சுந்திரதினத்தையொட்டி செங்கோட்டை வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

தில்லி செங்கோட்டையை சுற்றிலும் உச்சக்கட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதம் என்பதை மையக்கருத்தாக கொண்டு இந்த ஆண்டு சுதந்திர தினம் கொண்டாடப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சுதந்திர தின கொண்டாட்டங்களில் மக்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், ஆறாயிரம் சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

பழங்குடியினர், விவசாயிகள், மகளிர், இளையோர் ஆகியோர் இந்த சிறப்பு அழைப்பாளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அங்கன்வாடி பணியாளர்கள், பஞ்சாயத்து அமைப்புகளின் மகளிர் தலைவர்கள், மகளிர் மற்றும் குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலகங்களில் பணியாற்றுபவர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 23 பேர் தில்லி சுதந்திர தின நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் காலை ஒன்பத மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகிறார்.

காவல் துறையினரின் அணி வகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக் கொள்கிறார்.

மாவட்ட தலைநகரங்களில் ஆட்சியர்கள் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்துகின்றனர்.

அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்டவற்றிலும் சுதந்திர தினவிழா கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெறுகின்றன.

சுதந்திர தினத்தை முன்னிட்டு அரசு அலுவலகங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் உள்ளிட்டவை வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

சுதந்திர தினத்தையொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சுதந்திர தினத்தையொட்டி தலைவர்கள் பலர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதனிடையே குடியரசுத் தலைவரின் சுதந்திரதின உரை குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், அவரது உரை வளர்ச்சியடைந்த மற்றும் வளமான இந்தியாவை கட்டமைக்க ஊக்கம் அளிப்பதாக அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் இரண்டு இடங்கள் உட்பட நாட்டில் மேலும் மூன்று சதுப்பு நிலப்பகுதிகள் ராம்சார் தளங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

இதையடுத்து நாட்டில் உள்ள ராம்சார் தளங்களின் எண்ணிக்கை 85 ஆக அதிகரித்துள்ளது என சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நஞ்சராயன் பறவைகள் சரணாலயம், விழுப்புரம் அருகே உள்ள கழுவேலி பறவைகள் சரணாலயம் இதில் இடம்பெற்றுள்ளது.

மத்தியப் பிரதேசத்தின் தவா நீர்த்தேக்கமும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

ராம்சார் தளங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தமிழகம் மற்றும் மத்தியப் பிரதேச மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

வரும் காலங்களில் இதுபோன்ற முன்முயற்சிகள் தொடரும் என திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ராம்சார் தளங்களின் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளதற்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலினும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பில் தமிழக அரசின் அர்ப்பணிப்பை இது பிரதிபலிப்பதாக சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக பெண்கள் புகார் அளிக்க புதிய இணையதளம் தொடங்கப்பட்டுள்ளதாக மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூரில் சமூக நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - கீதாஜீவன் ) -30---- செகண்ட்*

சென்னையில் பெண்களுக்கான பிங்க் ஆட்டோ சேவை இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து மற்ற மாவட்டங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும் என்றும் திருமதி கீதாஜீவன் கூறினார்.

**[]<<<>>>[]**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நதிகளை தூய்மைப்படுத்த மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவு சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், சுற்றுச்சூழலுக்கு எற்ற வாழ்க்கை முறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று அவர் கூறினார்.

அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் இயக்கத்தில் அனைவரும் பங்கேற்று மரக்கன்றுகளை நட வேண்டுமென்று திரு அண்ணாமலை கேட்டுக் கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பள்ளிப்பாடப் புத்தகங்களுக்கு மானியம் வழங்கி அவற்றின் விலையை மாநில அரசு குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

பெரம்பலூரில் மத்திய அரசின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் மக்கள் தொடர்பகம் சார்பில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியல் மத்திய அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவிகள் இது தங்களுக்கு பெரிதும் பயனளிக்கும் வகையில் அமைந்ததாகத் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - மாணவிகள் ) ---- 50 செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தின் பெரும்பாலனா பகுதிகளில் இன்றும் நாளையும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, ஈரோடு, காஞ்சிபுரம், திண்டுக்கல் உள்ளிட்ட 14 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

கோவை, சேலம், ராமநாதபுரம், தஞ்சாவூர் உள்ளிட்ட 23 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் நாளை கன மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஆசியான் மற்றும் பிரிக்ஸ் நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற உணவுப் பாதுகாப்பு தொடர்பான கூட்டம் சிங்கப்பூரில் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

இலங்கையில் அடுத்த மாதம் 21-ம் தேதி நடைபெறவுள்ள அதிபர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரின் பாதுகாப்பு நிலைமை குறித்து தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் மற்றும் ராணுவ தலைமை தளபதி திரு உபேந்திர திவேதி ஆகியோருடன் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் ஆலோசனை நடத்தினார்.

**[]<<<>>>[]**

பஞ்சாயத்து அமைப்புகளில் மகளிரின் தலைமை தொடர்பான தேசிய பயிலரங்கு பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் சார்பில் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் அதிகாரிகள் மற்றும் உதவியாளர்களுக்கான புதுப்பிக்கப்பட்ட கையேட்டை மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் நேற்று வெளியிட்டார்.

**[]<<<>>>[]**

விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தை சீரமைப்பது குறித்து மாநில அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு பொன்முடி ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர்.

**[]<<<>>>[]**

நாட்டின் 78-வது சுதந்திரதினத்தையொட்டி, தூத்துக்குடியில் தேசிய மாணவர் படையினர் சார்பில் தேசியக் கொடி பேரணி நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணையில் இருந்து, முதல் போக பாசனத்திற்கு இன்று முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படும் என மாநில நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே மருதாநதி அணை நிரம்பியதை அடுத்து 100 கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

**[]<<<>>>[]**

சுதந்திர தினத்தையொட்டி சென்னையில் உள்ள முக்கிய திருக்கோவில்களில் இன்று சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நடைபெறும் என்று இந்து சமய அறநிலையத்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் தாக்கல் செய்த மனுவை விளையாட்டுகளுக்கான சர்வதேச நடுவர்மன்றம் நிராகரித்துள்ளது.

சர்வதேச நடுவர்மன்றத்தின் தீர்ப்பு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்று இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் பி டி உஷா கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**